

சென்னை ஜானகி எம்.ஜி.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு விழாவில் இலக்கியத் துறையில் சிறப்பாகச் செயல்படுபவர்களுக்கு வி.ஜி.பி. இலக்கிய விருது 2023 ஆம் ஆண்டிறகான விருதினை சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் முனைவர் பெ .மயிலவேலன் தலைவர் இந்திய படைப்பாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம், துணைத் தலைவர் பபாசி அவர்களுக்கு வழங்கிப் பாராட்டினார். உடன் வி.ஐ.டி. வேந்தர் விஸ்வநாதன் வி.ஜி.பி. சந்தோசம் நிறுவனர் வி.ஜி.பி. உலக தமிழ்ச் சங்கம், ரவி ராஜா, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் அவ்வை அருள் ஆகியோர் இருந்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 109,112 வட்ட தி.மு.க. ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி சார்பாக பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதில் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., எழிலன் எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் சிற்றரசு, பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம், வட்ட செயலாளர் சிட்டிபாபு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரையில்

# குருதிக்கொடை விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.மூர்த்தி தொடங்கி வைத்து - வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கினர்!

மதுரை, ஜூலை 24-

மதுரை மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத் தறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் குருதிக்கொடை விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை நேற்று (23.07.2023) தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி, மருத்துவ கல்லூரி மாணவர்கள் விடுதி சமையல் கூடத்தில் பயன்படுத்தும் வகையில் பயோ கேஸ் கூடத்தினை தொடங்கி வைத்தார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டதாவது :

இந்த ஆண்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நிதிநிலை அறிக்கையில் 110 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தையும் படிப்படியாக அடுத்த நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்பாக செயல்படுத்திட வேண்டுமென்கின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கேற்ப தினந்தோறும் பல்வேறு அறிவிப்புகள் செயலாக்கத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. அந்தவகையில் நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண் 30ன் படி அரசு இராசாசி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயற்கை எரிவாயு நிலையம் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவைகளில் ஒன்றாக சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் இயற்கை எரிவாயு நிலையம் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

குருதிக்கொடை அவசியம் குறித்து நாட்டுமக்களுக்கு வழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையில் 4500 மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்ட மாரத்தான் போட்டி இன்று காலை தொடங்கி வைக்கப்பட்டது. உதிரம் கொடுப்பதனால் உயிர்கள் காப்பாற்றப்படும் என்ற உண்ணத நோக்கத்துடன் இந்த விழிப்புணர்வு மாரத்தான் நடத்தப்பட்டது. இந்த மாரத்தான் போட்டியில் பங்கேற்ற அனைவரும் வரும் நாட்களில் உதிரம் தருவதை உறுதிபடுத்திட வேண்டும். அதனை வலியுறுத்துகின்ற வகையில் இன்று நானும் இரத்ததானம் செய்திருக்கிறேன். தற்போது எனக்கு 64 வயதாகிறது. இதுவரை 70 முறைக்கு மேல் இரத்ததானம் செய்திருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாள் விழா, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய பிறந்தநாள் விழாவிலும் குருதிகொடை அளிப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளேன். தமிழ்நாட்டை பொறுத்தவரை அரசின் சார்பில் இரத்த வங்கிகள் ஏராளமாக நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது. அன்மையில் கொல்லி மலையில் இரத்த வங்கியை தொடங்கி வைத்தேன். அரசின் சார்பில் 107 இரத்த வங்கிகளும், தனியார் சார்பில் 2228 இரத்த வங்கிகளும் உள்ளன. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னால் வரை தமிழ்நாடு குருதி கொடை அளிப்பதில் முதல் மாநிலமாக இருந்தது. ஆனால் தற்போது இரண்டாம் இடத்திற்கு வந்துள்ளது. மீண்டும் குருதிகொடை வழங்குவதில் தமிழ்நாடு முதல் இடத்திற்கு வரவேண்டும் என்கின்ற வகையில் இரத்ததான முகாம்கள் நடத்துவதோடு, அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மதுரை அரசு இரசாசி மருத்துவமனையில் ரேடியோ அலைவரிசை அடையாள சாதனமொன்றை நாங்கள் இயக்கி வைத்திருக்கிறோம். இந்த சாதனத்தின் மூலம் இரத்த வங்கியின் அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியும். பல்வேறு தொழில்நுட்ப வசதிகளை கொண்ட ரேடியோ அலைவரிசை அடையாள சாதனம் 2021 22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சர்கள் அறிவித்த அறிவிப்புகளில் ஒன்றாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய இரத்த வங்கி மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. மதுரை அரசு இராசாசி மருத்துவமனை இரத்ததானம் பெறுவதோடு மட்டுமல்லாது இரத்தத்தின் கூறுகளை கண்டறிவதிலும், இரத்தத்தின் பயன்பாட்டை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறுவதிலும் முதலாம் இடத்தில் இருக்கிறது. உதிரம் கொடுப்போம் உயிரை காப்போம் என்ற தலைப்பில் இந்த இரத்த தான முகாம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி குருதிகொடை தருபவர்களை ஊக்கப்படுத்துகிற வகையில், உற்சாகப்படுத்துகிற வகையில் மென்பொருள் கைபேசி செயலி இன்றைக்கு பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் இரத்த தானம் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன் வசந்த் அவர்கள், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், அரசு இராஜாஜி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ஆ. ரத்தினவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கடலூர் கிழக்கு மாவட்டத்தில் மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச்செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை

கடலூர், ஜூலை 24-

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மணிப்பூரில் பா.ஜ.க. அரசு தாய்மையை அவமானப்படுத்தும் நிகழ்வுகளை தடுக்க தவறி வேடிக்கை பார்த்து கொண்டு இருக்கின்ற ஒன்றிய அரசைக் கண்டித்து தலைமை கழக அறிவிப்பின்படி திமுக மகளிர் அணி சார்பில் கடலூர் கிழக்கு மாவட்டதிமுக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் இன்று (24.07.2023 திங்கட்கிழமை) காலை 9.00மணி அளவில் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.



இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் த.அமுதராணி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ப.மனோரஞ்சிதம் - மேயர் சுந்தரி ராஜா ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

அதுசமயம் மகளிர் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளை கழக மகளிர் துனண செய லாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், மகளிர் மாநகராட்சி மேயர், மண்டலக்கு ழுத்தலைவர்கள், ஒன்றிய குழுத் தலைவர், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துனை தலை வர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ணஒன்றிய குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மகளிரணியினர் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



நீலகிரி மாவட்ட நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மகளிர் அணியினர் ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது.

### தா.இளைய அருணா தலைமை! கலாநிதி வீராசாமி - ஆர்.டி.சேகர்- ஐட்ரீம் மூர்த்தி - ஜெ.ஜெ.எபினேசர் முன்னிலை!

## சென்னை வடக்கு மாவட்டத்தில் 2000 பேருக்கு நல உதவிகள்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

### அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு- அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

சென்னை,ஜூலை24

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 500 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, 500 கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை, 50 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி,250 துப்புரவு தொழிலாளர்களுக்கு உதவிகள், 250 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் என்று 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (24.7.2023 திங்கள் கிழமை) மாலை 4 மணிக்கு ஜெயின்ட் பீட்டர்ஸ் பள்ளி விளையாட்டு திடல் இராயபுரத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நல உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார்.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா எம்.சி.தலைமை வகிக்கிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி,எம்.பி., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., ந.மனோகரன், இரா.கருணாநிதி, வ.பெ.சுரேஷ்,இரா.செந்தில் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.வெற்றிவீரன், மு.கோபி,எஸ்.ஆர்.கமலக்கண்ணன், க.நாகம்மை,வி.தயாளன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இந் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இதில் இரா.மதிவாணன்,பி.டி.பாண்டிச்செல்வம்,இரா.நரேந்திரன்,ஆர்.எம்.டி.ரவீந்திரன்,சிம்லா முத்துச்சோழன், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், க.ஜெயராமன், அ.முருகன், நேதாஜி யு.கணேசன், ஸ்ரீராமுலு, சர்ப்பஜெயதாஸ், நா.சண்முகம், எல்.அருளரசன், வே.சிவக்குமார், கி.ராஜேந்திரன், கே.அமுலு, டி.கமலக்கண்ணன், ப.மதிவாணன், ஏ.தமிழ்ச்செல்வன், க.கோவிந்தசாமி, லியோ டி.சுரேஷ், லயன் எம்.தீனதயாளன், லட்சுமி வேலு, என்.மருதுகணேஷ், ரெயின்போ என்.விஜயகுமார், விமலா மோகன், கூல் பாயிண்ட் பிரகாஷ், எஸ்.எம்.அப்துல் ரஹ்மான், ஏ.ரமேஷ்பாபு, கோ.சதீஷ், லயோலா கே.மதன், இர.பொன்இளவரசன், ப.சோமசுந்தரமூர்த்தி, வை.கௌதமன், இ.ரவிகுமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

என்.கிருஷ்ணன், எஸ்.புகழேந்தி, ஆர்.வி.கணேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்குப்பகுதி 19வது வட்டம் மாத்தூர் எம்.எம்.டி.ஏ. – பா.ஜ.க. மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் பிரிவு செயலாளர் ஜி.எஸ்.சீனீவாசன் தலைமையில் பா.ஜ.க.வைச் சேர்ந்த தேவா, சரவணன், ஷீலா,சாந்தி, செல்வி, சாந்த குமாரி, பூங்கொடி, சுசிலா, லலிதா,ஜெயசித்ரா, உள்ளிட்ட 50 பேர் அக்கட்சியிலிருந்து விலகி மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் மாவட்டப் பிரதிநிதி கார்த்திகேயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.


